**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

O.S. 72/2017

நாள். 25.02.2022

வா.சா. 1 சகாதேவ ராஜா

**<u>23 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி சங்கம் பழைய பாளையம் கொட்டிமுக்கலூா், பெரிய சாவடி, இராஜபாளையம் கிராமம் சா்வே எண். 148-150 நில பங்காளிகள் தா்ம பொது சொத்து என்று இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு இருந்தபோது அது பதிவு செய்யப்படவில்லை. மேற்கூறிய சங்கத்தின் பெயரில் தான் 23 வது பிரதிவாதி வங்கியில் சேமிப்பு கணக்கு இருந்து வந்தது என்றால் 1980லிருந்தே உள்ளது. மேற்படி சங்கத்தின் ஏற்படும் தீா்மானத்தின் அடிப்படையில் தான் வங்கி கணக்கு இயக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சங்கம் பின்னா் தீா்மானத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி சங்கமாக பெயா் மாறியது என்றால் சரியல்ல. பிராதில் பழைய சங்கம் தான் வாதி சங்கமாக மாறியதாக வாசகங்கள் இல்லை என்றால் சொல்லியுள்ளேன். உரிய தீா்மானத்தின் பேரில் பழைய சங்கம் 1வது பிரதிவாதியாக உருமாறி அந்த பெயரில் 23வது பிரதிவாதி வங்கியில் கணக்கு இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. 23வது பிரதிவாதி வங்கியில் அனுமதிக்கப்பட்ட நபா்களால் அந்த கணக்கு இன்றுவரை இயக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கும், 23வது பிரதிவாதிக்கும் இடையே எந்த கூட்டுசதியும் இல்லை என்றால் சரியல்ல. அந்த கணக்கிலுள்ள பணம் அந்த சங்கத்திற்கு உரிய பணம் தான். சட்டத்திற்கு புறம்பாக 23ஆம் பிரதிவாதி வங்கியால் பணம் பரிமாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் 23ஆம் பிரதிவாதி மீது எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல.